# பகுதி — I
# [PART - I]

# வங்கியியல் சட்டம்
# (BANKING LAW)

## 1. இந்தியா மற்றும் இங்கிலாந்தில் வங்கியியலின் சரித்திரம்
## [HISTORY OF BANKING IN INDIA AND ENGLAND]

பாடச்சுருக்கம்: **(SYNOPSIS)**

அ. முன்னுரை

ஆ. வங்கியியலின் தோற்றம்

இ. வங்கியியல் நிறுவனங்களின் வளர்ச்சி

ஈ. இங்கிலாந்தில் வங்கியியல் முறையின் வளர்ச்சி

உ. இந்தியாவில் வங்கியியல் வர்த்தகம்

ஊ. இந்தியாவில் நிறுவனமயமாக்கப்பட்ட வங்கியியல் (தனியார் வங்கிகள்)

எ. உலகளாவிய சவால்களை சந்திப்பதற்கு இந்திய வங்கியியல் சட்டத்தில் சீர்திருத்தங்களுக்கான அவசியம்

ஏ. முடிவுரை

### அ. முன்னுரை: **(INTRODUCTION)**

உலகளாவிய உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் அதிகரிப்பினால் பொருட்கள் மற்றும் சேவைகளின் பெற ஆகும் விலை மதிப்பினை சீரான நிலையில் வைப்பது அவசியமாகிறது. இந்த நோக்கத்திற்கு வங்கியியல் முறை முக்கிய பங்கு வகிக்கிறது.



வங்கியியல் என்பது கடன் பெறுதல், கொடுத்தல் மற்றும் நிதி மேலாண்மையில் பங்கெடுத்து தேசிய மற்றும் உலகளாவிய பொருளாதாரத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் முக்கிய கருவியாக விளங்குகிறது. மேலும் வங்கிகள் மக்களின் சேமிப்புகளுக்கான நோக்கங்களாகும். ஒரு நாட்டின் தொழில், வர்த்தகம் மற்றும் விவசாய வளர்ச்சி பெருமளவு வங்கியியலையே சார்ந்துள்ளது.

### ஆ.வங்கியியலின் தோற்றம்: **(ORIGIN OF BANKING)**

ஒரு சாரர் கருத்துப்படி “வங்கி” என்று குறிப்பிடப்படும் சொல் பேங்கோ அல்லது பேங்கியூ எனும் இத்தாலிய சொல்லிலிருந் பிறந்ததாக கொள்ளப்படும். இதனை பெஞ்ச் என்றும் பொருள் கொள்ளலாம். பெஞ்ச் என்பது நாணயங்களை பார்வைக்கு வைத்து வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் மற்றும் நாணய மாற்றுக்காரர்கள் பண வர்த்தகப் பரிமாற்றம் செய்யும் சந்தையாகும்.

அந்நாட்களில், பணமாற்றம் என்பது வங்கியின் மிக முக்கியமான செயலாகக் கருதப்பட்டது. அந்த “பேங்கோ” என்ற இத்தாலி வார்த்தையானது இறுதியாக “பேங்க்” (வங்கி) என ஆங்கில மொழியில் மாறியது. வங்கியியலின் சரித்திரத்திலேயே மிகப் பழமையான வங்கியாக “வெனீஸ் வங்கி” கருதப்படுகிறது.

மேலும் மற்றுமொரு சாரார் வங்கி எனும் சொல் ஜெர்மனி நாட்டு சொல்லான பேக் என்பதிலிருந்து உதித்ததாக சொல்கின்றனர். இதன் பொருள் கூட்டுப்பங்கு நிதியம் — என்பதாகும். இறுதியில் இந்த ஜெர்மனியின் “பேக்” (Back) எனும் சொல்லானது “பேங்கோ” என இத்தாலியில் மாறியதாகக் கொள்ளப்படுகிறது.

### இ.வங்கியியல் நிறுவனங்களின் வளர்ச்சி: **(DEVELOPMENT OF BANKING INSTITUTIONS)**

வங்கியியல் வணிகம் மிகவும் தொன்மையானது. பாபிலோனியக் கோயில்களில் 2000 B.C. காலத்திலேயே வங்கியியல் முறை இருந்ததாக சான்றுகள் இருக்கிறது இக்கோயில்களில்

தங்கம் மற்றும் வெள்ளியை அதன் உரிமையாளர்கள் வைப்பீடு செய்து கடன் பெறுவார்கள். அப்பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு இக்கோயில்கள் பயன்படுத்தப்பட்டது.

### ஈ. இங்கிலாந்தில் வங்கியியல் முறையின் வளர்ச்சி:
**(DEVELOPMENT OF BANKING SYSTEM IN ENGLAND)**

இங்கிலாந்தில், வங்கியியல் வர்த்தகம் என்பது பொற்கொல்லர்களுக்கிடையே முதலாம் ராணி எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில் பெருமளவு வளர்ச்சியடைந்தது.

அதன் பிறகு 1672—ல் இரண்டாம் சார்லஸ் மன்னர் தன் காலத்தில் பொற்கொல்லர்களுக்கு கடன்களை திருப்பிச் செலுத்த தேவையில்லை என அறிவித்ததால் இங்கிலாந்தில் லாபகரமான வங்கியியல் வணிகம் சரிவை சந்தித்தது.

இதன் காரணமாகத்தான் தனியார் வங்கிகள் வளர்ச்சி பெறத் துவங்கின.

1694-ல், 'டன்னேஜ் சட்டம்' 1964-ன் கீழ், இங்கிலாந்து வங்கியானது முன்றாம் வில்லியம் அரசரால் தொடங்கப்பட்டது.

1890-ல், 'வங்கிச்சீட்டு' தரப்படுவதற்குப் பதிலாக, 'காசோலை' அறிமுகப்படுத்தப்பட்டது.

'பீல்ஸ் சட்டம் 1844' இயற்றப்பட்டு அதன் வழி இங்கிலாந்து வங்கி தவிர ஏனைய வங்கிகள் பணத்தாள்கள் வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் இங்கிலாந்து வங்கியே மைய வங்கியாக செயல்பட்டு 'வங்கித் தாள்"களை வழங்கி வந்தது.



### உ. இந்தியாவில் வங்கியியல் வர்த்தகம்:
**(BANKING BUSINESS IN INDIA)**

இந்தியாவில் வங்கியியல் வர்த்தகம்˙ என்பது ஒரு ஒப்பற்ற சரித்திரமாகும். இந்தியாவில் பழங்காலத்தில் இருந்த, நடந்த வங்கியியலின் கோட்பாடுகளைச் சொல்ல ஏராளமான ஆதாரங்கள் உள்ளது. வட்டித் தொழில் நடவடிக்கைகள் வேத காலங்களில் எழுதப்பட்ட பழமையான இந்து சமய நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

வைசிய இனத்தவர் வங்கியியல் நடவடிக்கைகள் புரிந்ததற்கான ஆதாரங்களும் இருக்கிறது. பழங்காலத்தில் வங்கியின் முக்கிய செயல்கள் என்பது பொது நபர்களுக்கு அல்லது அரசுக்கு நெருக்கடி நேரங்களில் கடன்தொகையை வழங்குவதாகவே இருந்து வந்தது.

பகடை ஆட்டத்தினால் கடனுக்கு ஆட்படுவது வேத காலத்திலேயே காணப்படுகிறது. இதற்கு (Rnam-Samm) "ஆர்நாம்–சாம்" என்று பெயர்.

நீதி சாஸ்திரம் தோன்றிய காலத்திற்கு முன்பு கூட, பணம் கடன் கொடுக்கும் தொழில் என்பது இருந்து வந்திருக்கிறது. மனுச்சட்டத்தில் வைப்பீடுகள் அடைமானங்கள் குறித்து தனிப்பிரிவே உள்ளது. "உண்டி"(Hundi) முறை என்பது அதாவது பணத்தைச் சேகரித்தல் என்பது "மகாபாரத" காலங்களில் கூட இருந்து வந்திருக்கிறது.

ஹஷரி முறை (Usury) அதாவது அதிகபட்ச வட்டியில் கடன் வழங்குதல் என்பது இந்தியாவில் புராண காலத்திலேயே இருந்துள்ளது.

இந்திய சரித்திர காலம் முழுவதும் விதர்சேத்ஸ் (Wither seths) அல்லது ஷ்ரோப் (Shroffs) என அழைக்கப்படும் கடன் கொடுப்பவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பெருமளவில் தனியார் வங்கியியலையும், பணம் கடன் கொடுக்கும் வணிகத்தையும் செய்திருக்கிறார்கள்.

இந்தியாவில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் மட்டுமே, உண்மையான வங்கியியல் முறை என்பது ஆரம்பமானது. 'கூட்டு பங்கு நிறுவனங்கள் சட்டம் 1850, அச்சட்டத்தின் வகையங்களின்படி வங்கியியல் வணிகம் தொடங்க நிறுவனங்களுக்கு அனுமதி அளித்தது. அதன்படி 'ஔத் வர்த்தக வங்கி' என்பது 1901 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வங்கியியல் நிறுவனங்கள் மற்றும் வங்கியியல் வணிகம் வேகமாக வளருவதை ஒழுங்குபடுத்தவே 'வங்கியல் ஒழுங்குமுறைச் சட்டம் 1949' இயற்றப்பட்டது.

1969 ஆம் வருடத்திற்கு முன் அரசாங்கத்திற்கு சொந்தமான இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய மாநில வங்கி தவிர பல தனியார் வங்கிகள் இருந்தன.ஆனால், 1969ல் 'வங்கிகள் தேசியமயமாக்கல் சட்டம் 1948', திருத்தம் செய்யப்பட்டு அதன் படி, 14 பெரிய பொருளாதார தனியார் வங்கிகளும், ஆறு பிற வங்கிகளும் 1980—ல் தேசியமயமாக்கப்பட்டன.

### ஊ.இந்தியாவில் நிறுவனமயமாக்கப்பட்ட வங்கியியல் (தனியார் வங்கிகள்): [INSTITUTIONALIZED BANKING IN INDIA (INDIGENOUS BANKS)]

நிறுவனமயமாக்கப்பட்ட வங்கியியல் என்பது கம்பெனிகள், குழுமங்கள், கழகங்கள் மூலம் நடத்தப்படும் வங்கி செயல்பாடுகள் ஆகும்.

இது இந்தியாவில் முதலில் திருவாளர்கள் அலெக்சாண்டர் & கம்பெனி, திருவாளர்கள். பெர்குஸ்ஸன் & கம்பெனி மற்றும் இதர கம்பெனிகள் மூலம் ஆரம்பிக்கப்பட்டது.



1809 ஆம் வருடம் நிறுவனமயமாக்கப்பட்ட வங்கியியலில் பணிடூரிய வங்காள வங்கிக்கு (Bank of Bengal) இந்திய அரசாங்கம் 50 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி அளித்தது.

1839 ஆம் வருடம் இந்த வங்கி கிளைகள் ஆரம்பித்து உள்நாட்டு செலாவணி செயல்பாடுகளை கையாளத் தொடங்கியது 1840 ஆம் வருடம் பம்பாய் வங்கி நிறுவப்பட்டது. 1843—ஆம் வருடம் மெட்ராஸ் வங்கி நிறுவப்பட்டது.

1860 ஆம் வருடம் வரை வங்கிகள் நிறுவனங்களாக இருந்தபோதிலும் வரம்பற்ற பொறுப்படைவுகளுடன் செயல்படுத்தப்பட்டன. 1860- ஆம் வருடத்தில் தான் வங்கிகளுக்கு வரம்புடை பொறுப்படைவுக் கொள்கை பின்பற்றப்பட்டது.

சுதேசி இயக்கம் பல புதிய நிறுவனங்களை ஆரம்பிக்க இந்தியர்களைத் தூண்டியது. 1906 -13 ஆம் வருடக்கால காலத்தில் கூட்டுப் பங்கு வங்கிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் பல நிறுவன மயமாக்கப்பட்ட வங்கிகள் செயல்பட ஆரம்பித்தது. பேங்க் ஆப் இந்தியா லிட்., சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா லிட்., இந்தியன் வங்கி லிட்., பேங்க் ஆப் பரோடா லிட்., போன்றவை முக்கியமான சில தனியார் வங்கி நிறுவனங்கள் ஆகும்.

1921 ஆம் வருடம் வங்காள வங்கி (Bank of Bengal) பம்பாய் வங்கி (Bank of Bombay) மெட்ராஸ் வங்கி (Bank of Madras) ஆகிய வங்கிகளை ஒருங்கிணைத்ததன் மூலம் இந்திய இம்பீரியல் வங்கி செயலுக்கு வந்தது. இந்திய இம்பீரியல் வங்கியின் செயல்பாடுகள் இந்திய ரிசர்வ் வங்கியினால் 1935 ஆம் வருடம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பாரத ஸ்டேட் வங்கி: (அனைத்து வங்கிகளின் மத்திய வங்கியியல் நிறுவனம்)

**[State Bank of India (Central Banking Institution of all Banks)]**

பாரத ஸ்டேட் வங்கி சட்டம் 1955 அமல்படுத்தப்பட்டதன் மூலம் இந்திய இம்பீரியல் வங்கியின் பணிகள் பாரத ஸ்டேட் வங்கியால் எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் இது அனைத்து வங்கிகளின் மத்திய வங்கி நிறுவனமாக ஆனது.

பாரத ஸ்டேட் வங்கி (துணை நிலை வங்கிகள்) சட்டம் 1955 அமல்படுத்தப்பட்ட பிறகு இந்தூர் ஸ்டேட் வங்கி, மைசூர் ஸ்டேட் வங்கி, திருவாங்கூர் ஸ்டேட் வங்கி, ஹைதராபாத் ஸ்டேட் வங்கி, பிக்கானிர் ஸ்டேட் வங்கி, ஜெய்ப்பூர் ஸ்டேட் வங்கி, பாட்டியாலா ஸ்டேட் வங்கி மற்றும் சௌராஸ்ட்ரா ஸ்டேட் வங்கி போன்ற பல துணை நிலை வங்கிகள் பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளாக அதன் கீழ் உருவாக்கப்பட்டது.

1960 ஆம் வருடத்திலிருந்து இந்திய ரிசர்வ் வங்கியின் முதன்மை முகமை வங்கியாக பாரத ஸ்டேட் வங்கி உருவெடுத்தது.

இவ்வாறு நிறுவனமயமாக்கப்பட்ட வங்கி வணிகம் கூட்டுப் பங்கு நிறுவனங்கள், தனியார் வங்கிகள், உள்நாட்டு வங்கிகள் (உள்ளூர் வங்கி) போன்ற அமைப்புகளின் வழி செயல்படுத்தப்பட்டது.

முன்னோடி வங்கிகள் திட்டம்:

**(Lead Banks Scheme )**

1969 ஆம் வருடம் இந்திய ரிசர்வ் வங்கி முன்னோடி வங்கி திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதன் கீழ் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியின்பொருட்டு வணிக



வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், அரசாங்கம் மற்றும் அரசு சார்ந்த முகமைகள் ஈடுபடுத்தப்பட்டது.

மாவட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊரக இடங்களில் வங்கியியல் தொழில் வளர்ச்சியில் இதர அனைத்து வங்கிகளுக்கு வழிகாட்டுவதற்கு அனைத்து பெரிய அட்டவணை வங்கிகளும் முன்னோடி வங்கிகளாக செயல்பட்டன.

கடன் தேவைகளை கணக்கிடுதல், அதிகளவில் கிளைகளை ஆரம்பித்தல் மற்றும் இதர வங்கிகளின் துணையோடு கடன்கள் வழங்குதல் போன்றவை முன்னோடி வங்கிகளின் பணிகளாகும்.

மேலும் உரிய அரசாங்கம் மற்றும் அரசாங்க முகமை போல்வுகளுடனான தொடர்புகள் மற்றும் உறவினை முன்னோடி வங்கி நீடித்துவர வேண்டும்.

அரசாங்க திட்டங்களான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமப்புற ஊரக வளர்ச்சித்திட்டம் (IRDP) நெறியுறுத்தப்பட்ட ஊரக வளர்ச்சி (DRD) போன்றவற்றையும் இந்த வங்கிகள் அமல்படுத்தியது.

கூட்டுறவு வங்கிகள்: **(Co-operative Banks)**

மத்திய மற்றும் மாநில கூட்டுறவு சட்டங்களின் கீழ் கூட்டுறவு வங்கிகள் அமலுக்கு வந்தது. தற்போது நாட்டின் கிராமப்புற வங்கியல் முறையில் கூட்டுறவு வங்கிகள் முக்கிய பங்கு ஆற்றுகின்றன.

மாநில கூட்டுறவு வங்கிகள் (SCB) மத்திய கூட்டுறவு வங்கிகள் (CCBs) தொடக்க நிலை நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் (PACB) போன்றவை பெரிய அளவிலான கூட்டுறவு வங்கிகள் ஆகும்.

விவசாயம், ஊரக வளர்ச்சி, ஏற்றுமதி, வீட்டு வசதி முன்னேற்றம் போன்றவற்றிற்கு நிதியுதவி அளிப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமயமாக்கப்பட்ட வங்கியியல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய தொழில் மறு கூட்டமைப்பு வங்கி (IRBI), இந்திய தொழில் கடனுதவி மற்றும் முதலீட்டுக் கழகம் (ICICI), இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI), இந்திய தொழில் நிதியுதவிக் கழகம் (IFCI) மாநில நிதியுதவிக் கழகங்கள் (SFCS), வைப்பீட்டுக் காப்பீடு மற்றும் கடனுதவி பொறுப்புறுதிக் கழகம் (DICGC), விவசாய நிதியுதவிக் கழகம் லிட் (AFC), இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி (EXIM bank), இந்திய ஏற்றுமதி கடனுதவி பொறுப்புறுதிக் கழகம் லிட் (ECGC), தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD) போன்றவை சில முக்கிய சிறப்பாய்வு நிறுவன மயமாக்கப்பட்ட வங்கிகள் ஆகும்.

எ. உலகளாவிய சவால்களை சந்திப்பதற்கு இந்திய வங்கியியல் சட்டத்தில் சீர்திருத்தங்களுக்கான அவசியம்: **(NECESSITY FOR REFORMS IN INDIAN BANKING LAW TO MEET GLOBAL CHALLENGES)**

சர்வதேச வங்கிகளோடு ஒப்பிடும்பொழுது இந்திய வங்கிகளின் தரநிலை மற்றும் சேவை உயர்நிலையில் இல்லை என்று விமர்சிக்கப்படுகிறது.

உலகமயமாக்கலுக்கு பிறகு பல பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவிற்குள் அடியெடுத்து வைத்தன. எனவே தற்போது இந்தியாவில் வங்கியியல் முறையில் மறுமலர்ச்சி உடனடியாக தேவைப்படுகிறது.

மேலும் தேசிய மற்றும் பன்னாட்டு தனியார் வங்கிகள் பல செயல்படத் துவங்கியுள்ளன. அவை தேசியமயமாக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகளை விட நல்ல சேவைகளை வழங்குகின்றன.



இந்த வங்கிகளுடன் போட்டியிட தேசியமயமாக்கப்பட்ட இந்திய வங்கிகளும், வங்கியியல் முறையும் உலகளாவிய மாற்றங்களை சந்திக்கும்பொருட்டு மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது.

சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப இந்திய வங்கியியல் முறை முன்னேற்றம் பெறத் தேவையான பரிந்துரைகள் சில பின்வருமாறு:

1. அனைத்து வங்கிகளின் அனைத்து கிளைகளிலும் கணினிமயமாக்குதல் மற்றும் இண்டர்நெட் வங்கியியல் என்று நவீனமயமாக்கப்பட வேண்டும்.

2. கடன்கள் வழங்குவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் கால அளவு மற்றும் குழப்பமான நடைமுறைகள் குறைக்கப்பட வேண்டும்.

3. வங்கியில் கணக்கு ஆரம்பிக்கும் நடைமுறை வாடிக்கையாளர்களுக்கு வாசலில் வந்து சேவை புரிதல் என்ற அளவில் சுருக்கப்பட வேண்டும்.

4. நாளின் எந்த நேரத்திலும் பணம் எடுக்கலாம் என்ற ATM சேவைகள் சிறுநகரம் மற்றும் கிராமப்புறங்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும்.

5. இந்தியாவில் நகரப் பகுதிகளை விட கிராமங்கள் மற்றும் ஊரகப் பகுதிகள் அதிகளவில் இருப்பதால் இந்த பகுதிகளுக்கு கடன்கள் வழங்குவது தாராளமயமாக்கப்பட வேண்டும்.

6. வங்கியர் பொதுமக்களை நட்பு முறையோடு அணுகி அவர்களின் பிரச்சனைகளை விரைந்து களைய முற்படவேண்டும் மேலும் இவ்வணுகுமுறை வங்கியர்களால் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். அத்துடன் கிராமப்புற மக்கள் வங்கி வசதி பெறும் பொருட்டு அவர்களுக்கு கல்வியறிவூட்ட வேண்டும்.

7. வங்கி அணுகு முறைகளுக்கு சேவைக் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். இதன் மூலம் அதிகளவிலான வாடிக்கையாளர்கள்

குறைந்த கட்டண செலவில் அத்தகைய சேவைகளை சுலபமாக பெற முடியும்.

8. இந்திய வங்கிகளின் தரநிலையை உயர்த்துவதற்கு ஊழல், சிவப்பு நாடா முறை மற்றும் பல வகையான வங்கி மோசடிகள் குறைக்கப்பட வேண்டும்.

### ஊ. முடிவுரை: (CONCLUSION)

இப்போது, வங்கிகள் பணத்தைக் கொண்டு கடன் தொழில் மட்டுமே செய்வதற்காக என்று கருதப்படுவதில்லை.

ஆனால், அது மக்களுக்குச் சேவை செய்யும் நிறுவனங்களாக அவர்களது சேமிப்புகளை தேசத்தின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிகளுக்கு பயன்படுத்தக் கூடிய நிறுவனங்களாகக் கருதப்படுகிறது.

எந்தவொரு தேசியப் பொருளாதாரத்திற்கும் அதன் முதுகெலும்பாகவே வங்கிகளின் செயற்பாடுகள் அமைகிறது. எந்தவொரு தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், குறிப்பாக விரைவில் முன்னுக்கு வரக்கூடிய வர்த்தக வியாபாரங்களை அமைப்பதற்கும் வங்கிகள் மிக முக்கியமாகின்றன.

### முந்தைய பல்கலைக்கழக வினாக்கள்:

1. வங்கியியல் முறையின் வளர்ச்சியினை விவரிக்க.
2. இங்கிலாந்து மற்றும் இந்தியாவிற்கான சிறப்பு ஒப்பிடுதலுடன் வங்கியியல் வளர்ச்சியினை எழுதுக.
3. ஐரோப்பா மற்றும் இந்தியாவில் பண்டைய காலங்களில் நிலவிய வங்கியியல் முறையினை விவரிக்க.



# 2. வங்கிகள் தேசியமயமாக்கல் நாட்டுடமையாக்கல் (அல்லது) அரசுடைமையாக்கல் [NATIONALIZATION OF BANKS]

**பாடச்சுருக்கம்: (SYNOPSIS)**

அ. முன்னுரை
ஆ. தேசியமயமாக்கலின் நிலைகள்
இ. தேசியமயமாக்கலின் செயற்பாடு
ஈ. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் நிர்வாகம் (பிரிவு 7 - 9)
உ. சிறப்புப் பொதுத்துறை நிதி வங்கிகள் / நிறுவனங்கள்
ஊ. தேசியமயமாக்கலின் நன்மைகள் (அதற்கான காரணங்கள்)
எ. தேசியமயமாக்கலின் தீமைகள்
ஏ. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் விளைவுகள்
ஐ. முடிவுரை

### அ. அறிமுகம்: (INTRODUCTION)

மத்திய அல்லது மாநில அரசுகளால், வங்கிகளின் சொந்த மற்றும் நிர்வாக உரிமைகள் எடுத்துக் கொள்ளப்பட்டால், அதுதான் வங்கிகள் தேசியமயமாக்கல் என்றழைக்கப்படுகிறது. இவ்வாறு அமைக்கப்பட்ட வங்கிகளே ‘தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்’ எனவும் அழைக்கப்படுகிறது.

வேறு வகையில் கூறினால் தேசியமயமாக்கல் என்பது தனியார் துறையிடமிருந்து வங்கிகளின் மேலாண்மை உள்ளிட்ட சொத்துரிமையை அரசாங்க (பொது) துறைக்கு மாற்றம் செய்யும் செய்முறையாகும்.